


மீன் பண்ணையைத் திறந்து வைக்க இருந்த மன்னருக்கு ஆயுசு கெட்டி. தப்பித்துவிட்டார். அதற்காக, வாழ்வே மாயம் பாடியபடி மோட்டுவளையைப் பார்த்துக் கொண்டா உட்கார்ந்திருக்க முடியும்?

இ.டி.ஏ.வில் எழுதப்படாத விதி என்று ஒன்று உண்டு. ஒரு முறை சறுக்கினாயா? பரவாயில்லை. பதறாதே. தேம்பாதே. எழுந்து பின்பக்கம் உள்ள மணலைத் தட்டிவிட்டு, சுறுசுறுப்பாகிவிடு. ஆனால், அடுத்த முறை நீ எடுத்து வைக்கும் அடி, அகலமாக இருக்க வேண்டும். உன் முந்தைய தோல்வியை மறக்கடிக்கும்படியாக இருக்க வேண்டும். நீ கீழே விழுந்த தடம் தெரியக் கூடாது.

எனவே, மன்னர் படுகொலைத் திட்டத்தில் ஈடுபட்ட அதே குழு. அதே ஆட்கள். அதே தீவிரத்துடன், அதே துடிதுடிப்புடன் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அடுத்து என்ன செய்யலாம்? அரசாங்கக் கட்டடம் எதையாவது தகர்த்து பொடிப்பொடியாக்கலாமா? அரசாங்க உயர் அதிகாரி யாரையாவது தீர்த்துக்கட்டலாமா? சினிமா தியேட்டர், பார்க், பார் எதையாவது வெடிக்க வைக்கலாமா? வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் யாரையாவது கடத்திக்கொண்டு போய் ஸ்பெயின் தேசத்தின் பெயரை சர்வதேச அளவில் ரிப்பேர் ஆக்கலாமா? டி.வி. டவரை உடைக்கலாமா? ஏதாவது செய்யத்தான் வேண்டும். ஆனால் என்ன?

அற்புத விளக்கு பூதம் போல் தலைமை அதிகாரிகளிடம் நேராகச் சென்று கேட்டே விட்டார்கள். 'ஐயா, ஏதாவது வேலை கொடுங்கள், கை அரிக்கிறது.' வலிய வந்து வேலை கேட்பவர்களை இ.டி.ஏ. தலைமை ஏமாற்றியதில்லை. 'சரி, கொஞ்ச நாளாச்சு, கார் பாம் வைத்துவிட்டு வாருங்கள்' என்று சொல்லி ஆசீர்வதித்து, அனுப்பி வைத்தார்கள். குறிப்பாக எங்கே என்று சொல்லவில்லை. எங்கே வைத்தாலும் பாம் வெடிக்கும். எங்கே வெடித்தாலும் மரணங்கள் நிச்சயம். ஆனால், இம்முறை நோக்கம் தெளிவானது. அதிகபட்ச அதிர்ச்சி உண்டாக்குதல். எனவே, டீக்கடைகளுக்கு பாம் வைக்க முடியாது.

Vallecas என்ற பிராந்தியத்தில் ஓர் இடம் தேர்ந்தெடுக்கப்பட்டது. மிலிட்டரிக்காரர்கள் வந்துபோகும் இடம். டாங்கிகளும், ஜீப்களும் சதா சர்வகாலமும் ஊர்ந்து செல்லும் சாலை. அதை சாலை என்றுகூடச் சொல்ல முடியாது. கிட்டத்தட்ட சிதிலமடைந்திருந்த ஒற்றையடிப் பாதை. தார் எல்லாம் போட்டிருக்கமாட்டார்கள். எப்படியும் பொது மக்கள் போக்குவரத்துக்கான வழித்தடம் அல்ல என்பதால், கொஞ்சம் சிதிலமடைந்த நிலைமையில் இருப்பதே ஓ.கே.தான் என்று நினைத்து அப்படியே விட்டுவிட்டார்கள். பாதுகாப்பு கருதி.

டிசம்பர் 11, 1995. இருட்டுவதற்கு முன்பு மூன்று பேர் ஸ்வெட்டர், மங்கி கேப் எல்லாம் போட்டுக்கொண்டு முகத்தை மறைத்தபடி ஒரு மரத்தில் ஏறி உட்கார்ந்துவிட்டார்கள். கையில் வயர்லெஸ். ஆனால் கொட்டக் கொட்ட கண் விழித்துக் காத்திருந்தார்கள்.

மறுநாள் விடிகாலை. தோராயமாக ஐந்து மணிக்கு முதல் ராணுவ ஜீப் விர்ரென்று கடந்து சென்றது. ஆசாமிகள் கீழே குதித்தார்கள். வேலையை ஆரம்பித்துவிடவேண்டியதுதான். முதல் ஆசாமி சரிவுகளில் இறங்கி, அங்கே முன்னரே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரை அடைந்தான். சத்தம் எழுப்பாமல் காரைக் கிளப்பி மேட்டின் மீது ஏற்றினான். உள்ளே, பின் சீட்டில் டிக் டிக் டிக்.

இரண்டாவது ஆசாமி இன்னமும் மரத்துக்கு மேலேதான் இருந்தான். அடுத்த அரை மணி நேரத்துக்கு ஈ, காக்காய் கூடக் கண்ணில் படவில்லை. பிறகு, தூரத்தில் ஒரு வேன் வருவது தெரிந்தது. வேன்! ஜீப்பை விடப் பெரியது. ஆசாமிகள் நிறையப் பேர் இருப்பார்கள். முதல் ஆசாமி பொத்தென்று கீழே குதித்து ஓட ஆரம்பித்தான். அதுதான் சமிக்ஞை. தயாராக இருந்த கார் ஆசாமி வண்டியை ஸ்டார்ட் செய்து நடுரோட்டில் நிப்பாட்டிவிட்டு, அக்கடாவென்று ஆதிப் பரம்பொருள் நாரணனை நினைத்தபடி காற்றில் கரைந்து காணாமல் போனான்.

அதற்குள் அந்த ராணுவ வேன், காரை நெருங்கிவிட்டது. டிரைவர் குழப்பத்துடன் வெளியில் எட்டிப் பார்த்து கெட்ட வார்த்தையில் திட்டிவிட்டு, வண்டியை விட்டு இறங்குவதற்கும், அந்தக் கார் சீறி வெடிப்பதற்கும் சரியாக இருந்தது. ஆறு பேர் உயிரை விட்டிருந்தார்கள். வேனும் காரும் அப்பளப் பொடிகளாக உதிர்ந்து விட்டன.

திருப்தி. கொஞ்சம் போல் திருப்தி. ஆனால், போதவில்லை. மீண்டும் மீண்டும் மன்னர் ஞாபகம். எத்தனை முறை புரண்டு படுத்தாலும் அவர் ஞாபகம். முள்ளாகத் தொண்டையில் சிக்கி உறுத்திக் கொண்டிருந்தது. பிசாத்து ஆறு பேரை பிய்த்துப் போட்டுவிட்டு, காலரை நிமிர்த்திக் கொள்ள முடியுமா?

ஸ்பானிஷ் மாலைப் பத்திரிகையில் நான்காவது பக்கத்தில் பாக்ஸ் செய்தி போட்டிருக்கிறார்கள். 'உள்ளூர் தீவிரவாதிகளின் சதி. சம்பவ இடத்தில் ஆறு பேர் மரணம். அவர்கள் பெயர் பின்வருமாறு. வயது பிராக்கட்டில். இந்தச் சம்பவம் குறித்து வாலிகாஸ் காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகிறார்கள்.'

அவமானம். பிச்சுவா பக்கிரி போல் ஆக்கிவிட்டார்கள். இ.டி.ஏ. என்ற பெயர் கூட வரவில்லை. போதாது. பெரிதாக ஏதாவது செய்துகாட்டவேண்டும். கூடுதல் வன்மையுடன். கூடுதல் ஆவேசத்துடன்.

Miguel Angel Blanco. யதேச்சையாகத்தான் இந்தப் பெயரை அவர்கள் செய்தித்தாளில் பார்த்தார்கள். உடனே, உடனே முடிவு செய்துவிட்டார்கள். போதும். மிகுவேல் ஏஞ்சல் போதும். ஊரே, தேசமே, உலகமே திரண்டுவிடும். இ.டி.ஏ.வின் பெயர் தலைப்புச் செய்திகளில். டி.வி.யைத் திறந்தால் இ.டி.ஏ.; ரேடியோவைத் திருகினால் இ.டி.ஏ. பதற்ற நிலை அறிவிப்பார்கள். ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்படும். ஸ்பெயின் வரைபடத்தைப் பிரித்து வைத்துக்கொண்டு பி.பி.சி.யில் விவாதிப்பார்கள். இ.டி.ஏ.வின் பூர்வீகத்தை. பாஸ்க் பூர்வீகத்தை. ஸ்பெயினின் எதிர்காலத்தை. போதாது?

மிகுவேல் ஏஞ்சல் மெய்யாகவே ஓர் ஏஞ்சல்தான். People's Party கட்சியைச் சேர்ந்த பெரிய தலை. ஸ்பெயினில் மிகுந்த செல்வாக்குடைய மனிதர். எருமா (Eruma) என்னும் பகுதியைச் சேர்ந்தவர். இந்தப் பகுதி இருப்பது பாஸ்க் தேசத்தில். இ.டி.ஏ.வைக் கண்டால் ஏஞ்சலுக்கு ஆகாது. சாத்தானைப் பார்ப்பதைப் போல் பார்ப்பார். தீங்கானவர். பயனற்றவர். நீக்குவதில் தப்பேயில்லை. உலக உத்தமர்களில் ஒருவர் குறைந்துபோனதாக இருக்கட்டும்.

எப்படி நீக்கலாம்? கார் பாம்? வைக்கலாம். பட், மீண்டும் மீண்டும் அதே கார், அதே குண்டு, அதே சேதாரம் என்றால், பேப்பர் படிப்பவர்களுக்கே அலுத்துவிடும். அடச்சே இவர்கள் இவ்வளவுதானா என்று சலித்துக்கொள்ள ஆரம்பித்துவிடுவார்கள். உலகம் மாறிக்கொண்டிருக்கிறது. இ.டி.ஏ.வும் மாறித்தான் ஆகவேண்டும். இன்னும் கொஞ்ச காலத்துக்கு கார் பாம் வேண்டாம். ஃபார்மட்டை மாற்ற வேண்டும். புருவங்களை உயர்த்த வேண்டும். வேறு ஏதாவது செய்தால்தான் இது சாத்தியம்.

'பேசாமல் நாம் அவரைக் கடத்திக்கொண்டு வந்தால் என்ன?'

சட்டென்று திரும்பினார் அந்தத் தலைமை அதிகாரி.

'கடத்தலாம். ஆனால், அதனால் நமக்கென்ன லாபம்?'

'இரண்டு விஷயங்களைச் சாதிக்கலாம். ஒன்று, நாம் எதிர்பார்க்கும் பரபரப்பு கிடைத்துவிடும். இரண்டு, நமக்கான சில வேலைகளைச் செய்து கொள்ள முடியும்.'

தெளிவான திட்டம் ஒன்று உருவாக ஆரம்பித்தது. ஏஞ்சலை கடத்திக்கொண்டு வந்துவிடுவது. வாயில்

பிளாஸ்திரியை ஒட்டி ஓர் அறையில் அடைத்துவிட வேண்டியது. பிறகு, அரசாங்கத்தைத் தொடர்பு கொள்ள வேண்டும். அதற்கு முன்னால், கோரிக்கை பட்டியல் தயாராக இருக்க வேண்டும். ஏஞ்சலை விடுவிக்கவேண்டுமானால், எங்களது கீழ்க்கண்ட கோரிக்கைகளை அதே வரிசையில் ஒழுங்கு மரியாதையாக நிறைவேற்றுங்கள். தவறினால், ஏஞ்சல் தவறிவிடுவார்.

சரி என்ன கேட்கலாம்? பணம். கேட்கலாம். ஆனால், பிரச்னை அதிகம். எண்களைக் குறித்து வைத்துக் கொள்வார்கள். எங்காவது டீயோ, பீரோ குடித்துவிட்டு பர்ஸைப் பிரிக்கும்போது, கப்பென்று பிடித்து விடுவார்கள். வேண்டாம். பணம் சம்பாதிப்பது பெரிய விஷயமல்ல. நகைக் கடை ஓனர், பரோட்டா மாஸ்டர், ஹெட் கான்ஸ்டபிள் என்று யாரையாவது கடத்திக் கொண்டு போய் மிரட்டினாலே கொடுத்துவிடுவார்கள்.

இது பெரிய மீன். பெரிய கோரிக்கையை எழுப்புவதே உசிதமானது. எனில், என்ன கேட்கலாம்? சிறையில் இருக்கும் இ.டி.ஏ. போராளிகளை? முக்கிய கமாண்டோக்களை? முக்கிய தளபதிகளை? முக்கிய வீரர்களை? ஆம். அதுதான் சரியாக இருக்கும். ஆட்கள்தான் வேண்டும். ஆட்கள் இருந்தால் வேண்டியமட்டும் சம்பாதித்துக்கொள்ளலாம். தவிரவும், பணம் கேட்கும் பிசாத்து இயக்கம் அல்ல நாங்கள். கொள்கை ரீதியாக, தத்துவார்த்த ரீதியாக, சித்தாந்த ரீதியாக பலம் பெற்று இயங்கி வரும் பேரியக்கம் என்று அரசாங்கத்துக்குத் தெள்ளத் தெளிவாகத் தெரிவித்து விடலாம். பணம் கேட்கும் ஆட்களை அரசாங்கம் மதிக்காது. சிறைபிடிக்கப்பட்ட ஆட்களைக் கேட்டால் பயம் வரும். அலறுவார்கள்.

ஏஞ்சலை நிழலாகப் பின்தொடரும் பணி ஆரம்பமானது. ஏஞ்சல் எப்போது படுக்கையைவிட்டு எழுந்திருக்கிறார்? எழுந்தபின் என்ன செய்கிறார்? பல் தேய்க்கிறாரா, பெட் டீ குடிக்கிறாரா? டிபன் என்ன? ஓட்ஸா? ரொட்டியா? வெளியில் மொட்டை மாடியில் எக்ஸர்ஸைஸ் செய்யும் வழக்கம் உண்டா? நாயை அழைத்துக் கொண்டு வாக்கிங் போவாரா? எப்போது அலுவலகம் போவார்? யாருடன்? அலுவலகம் முடிந்த பிறகு என்ன செய்வார்? சமர்த்தாக வீட்டுக்கா அல்லது வேறு எங்காவதா? கோல்ப் விளையாடுவாரா? படம் பார்ப்பாரா? நண்பர்களுடன் சேர்ந்து பாரில் தண்ணியடிப்பாரா?

எல்லா தகவல்களும் திரட்டப்பட்டன. அவசியமான தகவல்கள், அநாவசியமான தகவல்கள். எல்லாமே.

சுபமுகூர்த்த சுபநாள் அன்று ஏஞ்சலின் கார் வழிமறிக்கப்பட்டது. முகமூடி அணிந்த மூன்று பேர் அவரைக் கழுத்தைப் பிடித்து வெளியில் இழுத்து, தம் வேனில் ஏற்றிக்கொண்டு சிட்டெனப் பறந்துவிட்டார்கள். கண் மூடிக் கண் திறக்கும் நேரம்கூட ஆகியிருக்காது. சிக்கெனப் பிடித்தேன் சிவாய நமஹ.

ரகசிய அறையில் ஏஞ்சல் அடைத்து வைக்கப்பட்டார். பெரிய மீன். கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். தேவைப்படும் அத்தனை வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும் என்பது உத்தரவு. 'செய்தித்தாள் வேண்டுமா? இந்தா பிடி. சிகரெட் வேண்டுமா? கூச்சப்படாதே. கேள். கிடைக்கும்.' சத்தான போஷாக்கான உணவாகப் பார்த்து வாங்கிக் கொடுத்தார்கள். கேட்கும் நேரத்தில் காபி, டீ, பலகாரம், பபிள்கம்.

ஆனால், வாயில் நிரந்தரமாக பிளாஸ்திரி. சாப்பிடும்போது மட்டும் பிளாஸ்திரி பிரித்தெடுக்கப்படும். அந்த இடைப்பட்ட நேரத்திலும் கண்ணீர் மல்கப் புலம்ப ஆரம்பித்துவிடுவார் ஏஞ்சல். 'நான் என்ன பாவம் செய்தேன்? நீங்கள் யார்? என்னை ஏன் இப்படி அடைத்து வைக்கிறீர்கள்? பணம் வேண்டுமானால் கேளுங்கள். தருகிறேன்.'

அவரிடம் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை இ.டி.ஏ. பாஸ்க் பகுதியில் இருந்துகொண்டே சுதந்திர பாஸ்க் தேச கோரிக்கையை எதிர்க்கிறாயே? நீயெல்லாம் ஒரு மனுஷனா என்று கத்தவில்லை. கடிந்து ஒரு வார்த்தை பேசவில்லை. அதட்டவில்லை. குழந்தைக்குப் பால் ஊட்டுவது போல் வேளாவேளைக்கு ஆகாரத்தை மட்டும் கொடுத்துக்கொண்டே இருந்தார்கள்.

இரண்டே நாள்களில் ஸ்பெயின் கதிகலங்கிவிட்டது. செய்தித்தாள்களில் ஏஞ்சல். டி.வி.யில் ஏஞ்சல். ரேடியோவில் ஏஞ்சல். காணவில்லை. எங்கே போயிருப்பார்? யார் கடத்தியிருப்பார்கள்? People's Party அலுவலகத்தில் ஒரே அமளிதுமளி. தொண்டர்கள் கூடிவிட்டார்கள். எங்கே தலைவர் ஏஞ்சல்? எதிர்க்கட்சி ஆட்கள் யாராவது கடத்திவிட்டார்களா?

இ.டி.ஏ. கோயிஞ்சாமி ஒருவர் ஒரு ரகசிய எண்ணிலிருந்து பேசினார்.

‘அலோவ், அரசாங்க அண்ணாசாமிங்களா? நான் இ.டி.ஏ.லேருந்து பேசறேங்க. ஆமாங்க. எம்பேரு கோயிஞ்சாமிங்க. கொஞ்சம் பேசவேண்டியிருக்கு. இப்பம் சௌகரியப்படுங்களா, இல்ல அப்பால கூப்புடட்டுங்களா? என்னதுங்க? மேட்டரா? அது ஒண்ணுமில்லிங்க. அந்தாளு ஏஞ்சலு சமாசாரமாத்தான். எங்களுக்கு ஒண்ணும் அவசரமில்லீங்க. உங்களுக்கு எப்ப சௌகரியப்படுமோ சொல்லுங்க, பேசுவோம்.’